இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 262

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 05

**EPU5354– அழகியற்கல்வி**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 02.03.2024 நேரம்: மு.ப. 09.30 - மு.ப 11.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. "அழகியற் கற்கைகள் பிள்ளைகளின் கற்றலைத் தூண்டும் மற்றும் வளப்படுத்தும் தனித்துவமான கருவிகளாகும்" உதாரணங்கள் மூலம் சுருக்கமாக விளக்குக.

2. அழகியல் விழுமியங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி கலந்துரையாடுக.
   அ. தனியாள் மற்றும்
   ஆ. சமுதாயத்திற்கு

3. ஆரம்பப்பிரிவு பிள்ளைகளின் கல்வி விருத்திக்கு அழகியற் கல்வியின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.

4. கார்ட்னரின் கூற்றுப்படி (1983) உடல் / இயக்க நுண்மதி என்றால் என்ன? உதாரணங்களுடன் விளக்குக.

5. பிள்ளைகளின் நடனத்திறனை விருத்தி செய்வதில் வீட்டிலிருந்து கிடைக்கும் பங்களிப்பு பற்றி சுருக்கமாக விளக்குக.

6. சிறுவர் சித்திரக் கற்கையில், ஆசிரியர் அக்கறை கொள்ள வேண்டிய காரணிகளை சுருக்கமாக விளக்குக.

7. ஆக்கபூர்வமான ஆரம்பப்பிரிவு ஆசிரியரென்ற வகையில் நீங்கள் மேம்படுத்த வேண்டிய பண்புகளை சுருக்கமாக விபரிக்குக.

8. **"நாடகம்"** என்பதை உமது சொந்த மொழிநடையில் வரையறுக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. (i) சமூகத்திற்கு உணர்வுபூர்வமான பிள்ளைகளை வழங்குவதற்கு அழகியற் செயற்பாடுகள் ஊடாக நாடகமும் அரங்கியலும் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதை பற்றி கலந்துரையாடுக.

   **(10 புள்ளிகள்)**

   (ii) **"கதை கூறல்"** என்பது பிள்ளைகளிடம் ஒழுக்க நடத்தையை விருத்தி செய்ய பயன்படுகின்ற முறையாகும்".

   இவ் அறிக்கையுடன் உடன்படுகின்றீரா? உங்கள் விடையை உதாரணங்கள் மூலம் விளக்குக.

   **(10 புள்ளிகள்)**

10. **(i)** ஆரம்பப்பிரிவு பிள்ளைகளுக்கு வழங்கப்படும் இசைவும் அசைவினதும் அனுகூலங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** ஆரம்பக்கல்வியில் இசைவும் அசைவையும் எளிதாக்குவதில் ஆசிரியரின் வகிபங்கை விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

11. **(i)** ஆரம்பக் கல்வியில் கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கு நாடகச் செயற்பாடுகளை திட்டமிடுவதன் முக்கியத்துவத்தை பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** "இளம் பிள்ளைகளின் மனவெழுச்சி பின்னணியை அடையாளம் காண சிறுவர் சித்திரம் பயன்படுத்தப்படலாம்".
இக்கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்கள் பதிலை நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

12. **(i)** "ஆரம்பப் பாடசாலையின் பாடங்கள் அனைத்தும் அழகியல் திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குகிறது".
மேற்குறிப்பிட்ட கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்கள் பதிலை உதாரணங்கள் மூலம் நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** ஆரம்பப்பிரிவு வகுப்பறையில் அழகியற் செயற்பாடுகளை ஒன்றிணைப்பதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. **(i)** நாளாந்த வாழ்க்கையில் அழகியல் அனுபவங்களில் இளம் பிள்ளைகளை சாரங்கட்டுதலில் **(Scaffolding)** வளர்ந்தவர்களின் **(Adult)** வகிபங்கினை உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** ஏதாவதொரு ஆரம்பப்பிரிவின் கீழ் கருப்பொருளொன்றைத் தெரிவு செய்து, அழகியல் விருத்தியை ஏற்படுத்த **இரண்டு** (02) செயற்பாடுகளை உள்ளடக்கிய பாடத்திட்டத்தை உருவாக்குக,
ஒவ்வொரு செயற்பாடும் பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்.

(தரம், பாடம், கருப்பொருள், கற்றல் விளைவு, கற்பித்தல் துணைச்சாதனங்கள், கற்றல் மற்றும் கணிப்பீட்டின் படிநிலைகள்)

**(10 புள்ளிகள்)**

-முழுப்பதிப்புரிமையுடையது-